ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2151/57 - 2019 නොවැම්බර් මස 29 වැනි සිකුරාදා - 2019.11.29

*2151/57 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

### உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) என்னும் பிரிவின் கீழ் பொலன்னறுவை பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

பொலன்னறுவை பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவி, கேட்டு விலகியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும் ;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) என்னும் பிரிவின் கீழ், பொலன்னறுவை பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட டீ. லஹிரு அஷேன் என்பவர் அங்கம் வகிக்கின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான பொலன்னறுவை பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக எச். எம். சுனில் குலதிலக்க என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

1A - G 31599 — 27 (2019/11)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

இப்போது, பொலன்னறுவை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான லீலனாத் விக்கிரம ஆரச்சி ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66அ(1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு எச். எம். சுனில் குலதிலக்க என்பவர் பொலன்னறுவை பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

லீலனாத் விக்கிரம ஆரச்சி,
தெரிவத்தாட்சி அலுவலர்,
பொலன்னறுவை பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
பொலன்னறுவை,
2019, நவெம்பர் 27.

12-510

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.